## திருமங்கலம்

# மெட்ரோ ரெயில் நிலையத்தில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு!

சென்னை, நவ. 8

திருமங்கலம் ரெயில் நிலையத்தில் இன்று கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொது மக்களுக்கும் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக, மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதை பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில் கொரோனா வைரஸ் தடுப்புதொடர்பானவிழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சென்னைமெட்ரோரெயில் நிறுவனம்,நிமிர்வுகலையகம் அமைப்புடன் இணைந்து இன்று காலை திருமங்கலம் மெட்ரோ ரெயில்நிலையத்தில்பறையாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள்இந்நிகழ்ச்சியைகண்டு ரசித்தனர்.



கொரோனா தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் பறையாட்ட கலைநிகழ்ச்சி நடைபெற்ற போது எடுத்த படம்.